# தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2021-03-21

***இன்றைய வாசகங்கள்:***

*இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம்.* 31:31-34,

*பல்லவி: கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்:,*

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்.* 5:7-9,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 12: 20-33

## *திருப்பலி முன்னுரை:*

*இறைமகன் இயேசுவில் அன்புநிறைந்த சகோதரர்களே! சகோதரிகளே நீங்கள் அனைவரும் இயேசுக் கிறிஸ்துவால் குறைகள், தீமைகள் நீங்கி நலம் பெருக வாழ்த்துகிறேன். இன்று தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு.*

*ஆண்டவர் இயேசு துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். அவர் நிறைவுள்ளவராகி, நாம் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார் என்னும் மறையுண்மைகள், நாம் எவ்வாறு நிறைவடையலாம், மற்றவர்களுடைய மகிழ்ச்சிக்கு வழி வகுக்கலாம் என்பதனை தெளிவான செய்தியாக வழங்குகின்றன. அத்தோடு என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன்; அதை அவர்களது இதயத்தில் எழுதிவைப்பேன். நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன்; அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள்,அவர்களது தீச்செயலை நான் மன்னித்துவிடுவேன்; அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவு கூரமாட்டேன் என்னும் ஆசீர்வாதமும், நம்பிக்கையும் வழங்கப்படுகின்றன.*

*நாமும் இயேசு காட்டிய வழியைப் பின்பற்றி தாழ்ச்சியுளவர்களாகவும், இறைப்பற்று கலந்த அச்சமுடையவர்களாகவும், இறைவனையே நம்பி வாழும் மக்களாகவும் இருந்து செயற்படவும், நாம் உண்மையாகவே கடவுளின் மக்களாக வாழவும் வரம் கேட்டு, செபித்தவர்களாய் இத் திருப்பலியில் பங்கேற்போம்.*

## ***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***பணியாளரைப் பலப்படுத்தும் தந்தையே இறைவா!***

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவருக்கும் உமது வழிகளைக் கற்பித்து, புதுப்பிக்கும் ஆவியை அவர்களிடம் உருவாக்கி, இயேசுவைப் போல் துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, மகிழ்ச்சியூட்டும் இறையரசைக் கட்டியெழுப்ப வேண்டிய அருளை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***பாவங்களை நினைவு கூராத தந்தையே இறைவா!***

*நாங்கள் ஒவ்வொருவரும் இத்தவக்காலத்தில் இறைப்பற்றுக் கலந்த அச்சம் கொண்டவர்களாகவும், தாழ்ச்சியுள்ளவர்களாவும், உமக்குத் தொண்டு செய்வதில் ஆர்வமுள்ளவர்களாகவும் வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***எமக்கு ஆதரவளிக்கும் இறைவா!***

*கடின நோய்களினால் பாதிக்கப்பட்டு வீடுகளிலும்,மருத்துவ மனைகளிலிருந்தும் வேதனைப்படும் அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம். மக்களை வாட்டி வதைக்கும் எல்லா நோய்களும் அகன்று, அவர்கள் சுகமடையவும், அவர்களுடைய வேதனைகளைத் தணித்தருளவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***எமக்கு அனைத்தையும் கற்றுத்தரும் தந்தையே!***

*உம்மைப் பற்றிய அறிவிலும், ஞானத்திலும் நாமும், எமது பிள்ளைகளும் வளர எமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இறைவார்த்தையையும், திருச்சபைப் பணியாளர்கள் வழியாக நீர் வெளிப்படுத்தும் செய்திகளையும் எம் உள்ளத்தில் ஆழமாகப் பதித்து அறிவிலும், ஞானத்திலும் வளர நாம் முயற்சிகளை மேற்கொள்ள அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***நல் ஆயனே! எம் இறைவா!***

*இன்றைய உலகில் நிலவும் இளையோர்க்கு எதிராக எழுப்பப்படும் கலாசார சீர்கேடுகள், மாயகவர்ச்சிகள், பாலியல் வன்முறைகள் இவை அனைத்திலிருந்து எம் இளைனோரை பாதுகாத்து உம் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றின் மறைபொருளை அறிந்து நற்செய்தியின் தூதுவர்களாக வாழ வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நம்பிக்கை கொள்வோரை சூழந்து நிற்கும் பேரன்பு தெய்வமே!***

*பாடுகள், துன்பம், சாவு வழியாகவே மாட்சிமை மிகுந்த உமது விண்ணக மகிழ்ச்சியில் பங்கேற்க முடியுமெனும் உண்மையை உய்த்துணர்ந்து நாங்கள் அதற்கு தகுதியுள்ளவர்களாக எம்மை உருமாற்ற வரமளிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***நிலைவாழ்வுத் தரும் ஊற்றாகிய எம் இறைவா!***

*கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட உலக நாடுகளின் மக்களைக் கண்ணோக்கியருளும். அவர்கள் அனைவரும் விரைவில் குணமடையவும், இந்நோய் முற்றிலும் நீங்கிடவும், இத்தவக்காலத்தில் உம் மக்கள் அனைவரும் ஆலயம் சென்று, ஒன்றிணைந்துச் செபிக்கவும் தேவையான அருளை வழங்கிட இறைவா உம்மிடம் மன்றாடுகிறோம்.*

www.tamilcatholicnews.com